
## 38 லிப்டுகளில் 14 மட்டுமே செயல்படுகின்றன

# டேசா ரெஜாங் மக்கள் நாளும் அவதி



கோலாலம்பூர், ஜன. 1-

டேசா ரெஜாங் பொது மக்கள் வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்நோக்கும் லிப்ட் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும். இந்த விவகாரத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) மிகக்கடுமையாகக் கருது கிறது என்று நேற்று இங்கு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

டேசா ரெஜாங் அடுக்குமாடி குடியிருப்பில் குறிப்பாக புளோக் டி-யில் புதிய லிப்டுகளைப் பொருத்துவதற்கான பணிகள் கட்டங்கட்டமாக மேற்கொள்ளப்படும். இதற்கான குத்தகையாளரும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்பதை டிபிகேஎல் உறுதி செய்தது.

டேசா ரெஜாங் அடுக்குமாடி குடியிருப்பில் 38 லிப்டுகள் உள்ளன. இவற்றுள் 18 லிப்டுகள் மாற்றப்பட்டு புதிய லிப்டுகள் பொருத்தப்படவுள்ளன. எஞ்சியிருக்கும் 20 லிப்டுகளில் 14 மட்டுமே தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று டிபிகேஎல் குறிப்பிட்டது.

பணியிடப் பாதுகாப்பு சுகாதார இலாகா கடந்த டிசம்பர் 18ஆம் தேதி இங்கு லிப்டுகளைப் பார்வையிட்டது. அதன்பின்னர் புளோக் டி-யில் இரண்டு லிப்டுகள் பயன்பாட்டிற்கு மூடப்பட்டன. இதில் ஒன்று விரைவில் மாற்றப்படும். இதன் காரணமாக அந்தப் புளோக்கில் லிப்டு செயல்பாடு குறைந்திருக்கிறது.

இதனால் அந்தக் குடியிருப்பில் வசிக்கின்றவர்கள் ஒவ்வொரு நாளும் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிஃப் கடந்த டிசம்பர் 19ஆம் தேதி பாதிக்கப்பட்ட மக்க ளைச் சந்தித்து நிலவரங்களைக் கண்டறிந்தார்.

புது லிப்டுகளைப் பொருத்து வதற்கான அங்கீகாரத்தைத் துரிதப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார். டத்தோ பண்டார், பணியிடப் பாதுகாப்பு சுகாதார இலாகா, குத்தகையாளர் ஆகியோரிடையிலான சந்திப்பிற்குப் பின்னர் இந்தக் குடியிருப்பில் உள்ள அனைத்து லிப்டுகளும் பரிசோதிக்கப்படுவதற்கு டிபிகேஎல் உத்தரவிட்டிருக்கிறது.

இங்கு வாழும் மக்களின் பாதுகாப்பில் மாநகர் மன்றம் அதீத கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் இங்கு ஆகக்கடைசியான நிலவரங்களை டிபிகேஎல் தொடர்ந்து கண்காணித்து வரும். லிப்ட் பழுதுபார்ப்பு, புதிய லிப்டுகள் பொருத்தும் பணிகளைக் குறிப்பிட்ட காலத் திற்குள் செய்து முடிப்பதற்குத் தவறும் தரப்புகளுக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர் மன்றம் அந்த அறிக்கையில் எச்சரித்திருக்கிறது.

நடப்பு முயற்சிகளைப் புரிந்துகொண்டு லிப்ட் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு டேசா ரெஜாங் அடுக்குமாடி குடியிருப்பாளர்களை டிபிகேஎல் கேட்டுக் கொண்டிருக்கிறது.